# 24-06-2024 செய்தி

## வறுமை ஒழிப்பில் முந்துகின்றனவா வட மாநிலங்கள்?

- 2015-16 மற்றும் 2019-21க்க இடையில் இதுவரை இல்லாத அளவுக்கு இந்தியாவில் வறுமையின் பிடியிலிருந்து தப்பியவர்களின் எண்ணிக்கை 13.55 கோடி என 2023இல் நிதி ஆயோக் வெளியிட்டுள்ள தேசிய பல பரிமாண வறுமைக் குறியீட்டு (National Multidimensional Poverty Index) அறிக்கை மதிப்பிட்டுள்ளது.
- அதாவது, 2015-16 இல் 24.85% ஆக இருந்த வறுமையில் வாடும் மக்களின் ஒட்டுமொத்த அளவு, 2019-21 இல் 14.96% ஆகக் குறைந்துள்ளது. கிராமப்புறங்களில் 32.59% இலிருந்து 19.28% ஆகக் குறைந்துள்ளது.

**முறைவியலில் மாற்றம்**

- 1971-இல் பொருளாதார அறிஞர்களான வி.எம். துண்டேகர், என்.ராத் ஆகியோரால் இந்தியாவில் முதல் முறையாக வறுமை மதிப்பீடு நடத்தப்பட்டது.
- 2011-12 ஆம் ஆண்டு வரையில், மாதாந்திரத் தனிநபர் நுகர்வுச் செலவினங்கள் வறுமையை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டன.
- தேசிய மாதிரி ஆய்வு அமைப்பு வெளியிடும் நுகர்வுச் செலவும் தரவுகளைப் பயன்படுத்தி, 1972-73 முதல் 2011-12 வரை, ஐந்தாண்டுக்கு ஒருமுறை என்கிற அடிப்படையில், அனைத்து மாநிலங்களுக்கும், மொத்த இந்தியாவுக்கும் கிராமப்புற நகர்ப்புறங்களுக்கும் தனித்தனியாக வறுமையின் அளவு மதிப்பிடப்பட்டது.
- குடும்பங்களின் நுகர்வுச் செலவினங்களின் அடிப்படையில் மட்டும் வறுமையை அளவிடுவதில் உள்ள குறைபாடுகளைப் புரிந்துகொண்டு முதல் முறையாகப் பல்வேறு வளர்ச்சித் காரணிகளை உள்ளடக்கி வறுமையை அளவிடுவதற்குப் பல பரிமாண வறுமைக் குறியீடு என்ற ஒரு புதிய விரிவான வழிமுறையை நிதி ஆயோக் உருவாக்கியுள்ளது.
- அதாவது சுகாதாரம், கல்வி, வாழ்க்கைத் தரம் ஆகிய மூன்று முக்கியக் காரணிகளின் கீழ், 12 குறியீடுகளைக் கொண்டு, 2015-16 மற்றும் 2019-21 ஆண்டுகளில் வெளியிடப்பட்ட தேசியக் குடும்ப நல ஆய்வின் தரவுகளைப் பயன்படுத்தி 28 மாநிலங்கள், மத்திய ஆட்சிப் பகுதிகள், 707 மாவட்டங்களுக்குத் தற்போது பலபரிமாண வறுமைத் தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**வறுமை அளவில் குறைவு**

- புதிய மதிப்பீட்டின்படி, வறுமையின் அளவு மிக வேகமாகக் குறைந்துள்ளது. 2015-16 முதல் 2019-21 வரையிலான ஐந்து ஆண்டுகளில், வறுமையின் கீழ் வாழும் மக்களின் அளவு ஆண்டுக்குச் சராசரியாக 2.70 கோடி எனக் குறைந்துள்ளது.
- ஆனால், நுகர்வுச் செலவினங்களின் அடிப்படையில் 2004-05 மற்றும் 2011-12 வரையிலான ஏழு ஆண்டுகளில், மதிப்பிடப்பட்ட வறுமைக் குறைப்பின் அளவு ஆண்டுக்குச் சராசரியாக 1.96 கோடி மட்டுமே,
- அதாவது, நுகர்வுச் செலவினங்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள வறுமை அளவைக் காட்டிலும், பல பரிமாண மதிப்பீட்டின்படி ஒவ்வோர் ஆண்டிலும் சராசரியாக 74 லட்சம் பேர் வறுமையின் பிடியிலிருந்து அதிகமாக மீட்கப்பட்டுள்ளார்கள்.

### BIMARU

- பிமாரு (BIMARU) என்ற சுருக்கமாக அழைக்கப்படுகின்ற பிஹார், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், உத்தரப்பிரதேம் போன்ற மாநிலங்களில் பல ஆண்டுகளாக வறுமைக் குறைவின் வேகம் மெதுவாக இருந்தது உண்மை.
- ஆனால், 2015-16 மற்றும் 2019-21க்கு இடைப்பட்ட ஐந்து ஆண்டுகளில் மிகவும் வளர்ந்த மாநிலங்களைவிடவும் பிமாரு மாநிலங்களில் வறுமையின் அளவு சதவீதப் புள்ளி மாற்றத்தின் அடிப்படையில் வேகமாகக் குறைந்துள்ளது.
- மொத்தம் உள்ள 28 மாநிலங்களில், பிமாரு மாநிலங்கள் வறுமைக் குறைப்பில் முதல் ஐந்து இடங்களைப் பிடித்துள்ளன.
- மிகவும் அதிகமாக, பிஹாரில் சதவீதப் புள்ளி மாற்றத்தின்படி வறுமையின் அளவு 18.13% ஆகக் குறைந்துள்ளது.
- அதைத் தொடர்ந்து, மத்தியப் பிரதேசம் (15.94), உத்திரப் பிரதேசம் (14.75), ஒடிசா (13.65), ராஜஸ்தான் (13.56) ஆகிய மாநிலங்களில் மிகப்பெரிய அளவில் வறுமைக் குறைப்பு நடந்துள்ளது.
- பிமாரு மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் மேற்கு வங்கம் சற்று உயரிய வளர்ச்சிக் குறியீடுகளைக் கொண்டிருந்தாலும், அதனால் வறுமையை 9.41 சதவீதப் புள்ளிகள் மட்டுமே குறைக்க முடிந்துள்ளது.

SURESH'

- மறுபுறம், ஒப்பீடுகையில் வளர்ந்த மாநிலங்களான மகாராஷ்டிரம் (6.99), குஜராத் (6.51) ஆந்திரப் பிரதேசம் (5.71), கர்நாடகம் (5.20) போன்றவை பிமாரு மாநிலங்களுடன் ஒப்பிடும்போது குறைந்த வேகத்தில் வறுமையை குறைந்துள்ளன.
- பல ஆண்டுகளாக அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக் கொள்கையை பின்பற்றுகின்ற தமிழ்நாடு, கேரள மாநிலங்களில் சதவீதப்புள்ளி மாற்றத்தின் அடிப்படையில் வறுமைக் குறைப்பு மிகவும் குறைவாக உள்ளது.

**மக்கள் எண்ணிக்கை அளவு**

- இந்திய அளவில் 2015-16 முதல் 2019-21 வரையிலான ஐந்து ஆண்டுகளில் 13.55 கோடி பேர் வறுமையிலிருந்து விடுபட்டுள்ளனர்.
- உத்தரப் பிரதேசம் மட்டும் 3.43 கோடி பேரை வறுமையிலிருந்து மீட்டுள்ளது.
- அதைத் தொடர்ந்து, பிற பிமாரு மாநிலங்களான பிஹார் (2.55 கோடி), மத்தியப் பிரதேசம் (1.36 கோடி), ராஜஸ்தான் (1.08 கோடி) போன்ற மாநிலங்களும் பெரிய அளவில் வறுமையைக் குறைத்துள்ளன.
- வளர்ச்சியடைந்த தென் மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம் (30.20 லட்சம்), கர்நாடகம்(34.87 லட்சம்), தெலுங்கானா (27.61 லட்சம்), தமிழ்நாடு (19.58 லட்சம்), கேரளம் (53.239) ஆகியவை குறைந்த அளவிலான மக்களையே வறுமையிலிருந்து மீட்டுள்ளன.
- இதையே வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், இந்தியாவில் 38.05% மக்கள்தொகைப் பங்கைக் கொண்டுள்ள பிமாரு மாநிலங்கள் 8.12 கோடி மக்களை வறுமையிலிருந்து மீட்டுள்ளன.
- இது அகில இந்திய அளவில் வறுமையிலிருந்து விடுவிக்கப்பட்ட மொத்த மக்களின் எண்ணிக்கையில் 59.92% ஆகும்.
- ஆனால், வளர்ச்சியடைந்த தென் மாநிலங்களின் பங்கு இந்தியாவின் மக்கள் தொகையில் 19.71% ஆக இருந்தபோதும், அகில இந்திய அளவில் வறுமையிலிருந்து மீட்கப்பட்ட மக்களின் எண்ணிக்கையில் இம்மாநிலங்களின் பங்கு வெறும் 8.33% (1.13 கோடி) மட்டுமே.
- பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்தியதோடு கல்வி, ஊட்டச்சத்து, நீர், சுகாதாரம், சமையல் எரிபொருள், மின்சாரம், வீட்டுவசதி போன்ற முக்கியமான துறைகளில் முதலீடு செய்வதில் அரசாங்கம் கவனம் செலுத்திய காரணத்தால், மக்களின் வறுமையைப் பெருமளவில் குறைக்க முடிந்ததாக, நிதி ஆயோக் வெளியிட்டுள்ள பல பரிமாண வறுமைக் குறியீட்டு அறிக்கை கூறியுள்ளது.

## அசைத்துப் பார்க்கப்படும் அமெரிக்க டாலர்

- உலக நாடுகள் தங்கள் மத்தய வங்கிகள் மூலம்வெளியிடும் பணம், சொந்த நாட்டிலும், இன்னும் ஒரு சில அண்டைநாடுகளிலும் செல்லுபடியாகும்.
- ஆனால், அமெரிக்கா வெளியிடும் டாலர் மட்டும் பெரும்பாலான நாடுகளில் செல்லுபடியாகக் கூடிய ஒரு சர்வதேச கரன்சியாக இருக்கிறது.
- அதனால், நாடுகள் செய்யும் ஏற்றுமதி இறக்குமதிகளுக்கு தங்கள் நாட்டு கரன்சியில் விலை வைக்காமல், அமெரிக்க டாலரில் விலை வைக்க வேண்டிய நிலை, தற்போது நாடுகளுக்கிடையே நடக்கும் வர்த்தகத்தில் 88% அமெரிக்க டாலரில்தான் நடக்கிறது.

**கேள்விகள்**

- மேலும், பல அரசாங்கங்கள் சேமித்து வைத்திருக்கும் மொத்த அந்நியச் செலவாணிகையிருப்பில் 54% அமெரிக்காவின் மத்திய வங்கியான ஃபெடரல் ரிசர்வின் மாஷரி பாண்டுகள்தான்.
- பெரிய நாடாக இருந்தாலும் நெ. பொருளாதாரமாக இருந்தாலும் மற்ற 195 நாடுகளைப் போல அமெரிக்காவும் ஒரு நாடுதானே.
- அந்த நாட்டின் பணம் ஏன் எல்லா நாடுகளிலும் செல்லுபடியாக வேண்டும்? எதற்காக பல நாடுகளும் அதை தங்கள் நாட்டின் அந்நியச் செலவாணி கையிருப்பாக சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும்?
- ஒரு அமெரிக்க டாலருக்கு ஈடாக நம்முடைய 83 ரூபாய் இந்தியப் பணத்தை கொடுக்க வேண்டி இருப்பது ஏன்? ஒரு அமெரிக்க டாலருக்கு பாகிஸ்தான் ரூ. 278.
- இலங்கை ரூ.305 –ஐ ஈடாக கொடுக்க வேண்டியிருக்கிறது? இவையெல்லாம் எப்போது மாறும்? என்பது போன்ற கேள்விகள் கேட்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

**முக்கிய கல்வி**

- பிடிக்கிறதோ இல்லையோ, உலகப் பொருளாதாரத்தை அமெரிக்க டாலரை தவிர்த்து, புரிந்து கொள்ளவோ, வரையறை செய்யவோ, மாற்றவோ இயலாது.
- அந்த அளவுக்கு அமெரிக்க டாலர் உலகப் பொருளதாரத்தின் முக்கிய கருவியாகி சில தசமங்கள் ஆகின்றன.

**ஏன் எப்படி**

- இரண்டாவது உலகப் போர் தொடங்குவதற்கு முன்பு வரை, கிட்டத்தட்ட ஒரு நூறு ஆண்டு காலத்துக்கு, பல்வேறு நாடுகளை ஆதிக்கம் செலுத்தின் கொண்டிருந்த பணக்கார நாடு இங்கிலாந்து. அதன் ஸ்டெர்லிங் பவுண்ட் தான் உலக நாடுகளின் ரிசர்வாகப் பயன்படுத்தப்பட்டது.

- ஆறு ஆண்டுகள் நடந்த இரண்டாம் உலகப் போரில் இங்கிலாந்து உள்பட பல்வேறு பெரிய நாடுகள் தாக்குதலுக்கு உள்ளாகி, போர் முடிந்த போது, அவற்றின் பொருளாதாரம் படு பாதாளத்தில் இருந்தன.
- அமெரிக்கா மட்டும் அதிகம் பாதிக்கப்படாத பெரிய பொருளாதாரமாக இருந்தது.

## Bretton woods

- 1944-ம் ஆண்டு நியூ ஹாம்ஸையரில் அமைந்திருக்கும் பெரட்டன் வூட்ஸ் என்கிற இடத்தில், ஐக்கிய நாடுகளின் நிதி மாநாடு ஒன்று நடந்தது.
- அதில் 44 நாடுகளின் 730 பிரதிநிதிகள் கலந்து பேசி, சில முடிவுகள் எடுத்து, பெரட்டன் வூட்ஸ் (Bretton woods) ஒப்பந்தம் போட்டுக்கொண்டார்கள்.
- அதன்படி, அமெரிக்க டாலரை நடுநாயகமாக வைத்து, மற்ற நாட்டின் பணங்களுக்கு மதிப்பு கொடுக்கலாம் என்றும், அமெரிக்கா டாலர்களை அச்சடிக்க அதற்கேற்ற அளவு தங்கம் இருப்பு வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.
- ஆரம்ப கணக்குப்படி ஒரு அவுன்ஸ் தங்கம் 35 டாலர்கள் என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி அமெரிக்க டாலரைக் கொடுத்தால் (சரண்டர்) அந்த மதிப்புக்கு ஏற்ற தங்கத்தை அமெரிக்க பெடரல் தர வேண்டும்.
- அப்போது தொடங்கப்பட்டவைதான், இப்போதும் இயங்கிக் கொண்டிருக்கிற சர்வதேச நிதியம் (ஐஎம்எஃப்) மற்றும் உலக வங்கி ஆகிய இரண்டும்.
- சில ஆண்டுகளுக்கு பின், தங்கம் இல்லாமலேயே அமெரிக்க டாலர் அச்சடித்துக் கொண்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டு எழுந்தது.

### ரிச்சர்ட்

- பிறகு, 1971-ல் அமெரிக்க அதிபர் ரிச்சர்ட் நிக்சன் பெரட்டன் வூட்ஸ் ஒப்பந்தம் முடிந்தது, இனி டாலர் அச்சடிக்க இணையான தங்கம் வைத்துக் கொள்ள முடியாது என்றார்.
- அதனால் உலக நாடுகள், அமெரிக்க டாலரை பயன்படுத்தாமல் போகக்கூடும் என்பதால், சவுதி அரேபியாவுடன் ஹென்றி கிசிஞ்சர் மூலம் ஓர் ஒப்பந்தம் போட்டார்.

### சவுதி ஒப்பந்தம்

- உலக கச்சா எண்ணெய் உற்பத்தியில் பெரும்பங்கு வகித்த சவுதி அரேபியாவிடம், உங்களுக்கு நாங்கள் ராணுவ பாதுகாப்புத் தருகிறோம்.
- அதற்காக நீங்கள் இனி கச்சா எண்ணெயை அமெரிக்க டாலர் கொடுப்பவர்களுக்கு மட்டுமே விற்க வேண்டும் என்றார். ஒப்பந்தம் 1974 ஜூன் மாதம் 8-ம் தேதி கையெழுத்தானது.
- அதனால் கச்சா எண்ணெயை வாங்க அதற்கு கடன் பெற, கப்பலில் கொண்டு செல்ல, அதற்கு காப்பீடு எடுக்க, என்று எதுவானாலும், அமெரிக்க நிறுவனங்கள், அமெரிக்கப் பணம், அமெரிக்க ஸ்விப்ட் பைனான்சியல் சிஸ்டம் என்றானது.
- இப்படியாக, இணையான தங்கம் வைத்துக்கொள்ளாமலேயே அச்சடிக்கப்படும். டாலர், மீண்டும் சர்வதேச கரன்சியாக தொடர்ந்தது.
- 50 ஆண்டுகளாக தொடர்ந்த, அந்த பெட்ரோ டாலர் ஒப்பந்தம், 2024 ஜூன் மாதம் வழக்கம் போல நீட்டிக்கப்படவில்லை என்பதுதான் உலா வரும் செய்தி.
- அமெரிக்க டாலர் பல்வேறு நாடுகளுக்கும் வர்த்தகம் செய்ய தேவைப்படும் ஒரு பணமாக, அந்நிய செலவாணி கையிருப்பாக வைத்துக் கொள்ளக் கூடிய டிரஷரி பாண்டாக இருப்பதாலும், அமெரிக்கா ஆதிக்கம் செலுத்துகிற ஸ்விப்ட் பைனான்சியல் சிஸ்டம் (Society for Worldwide Interbank Financial Telecommunication (SWIFT) பெரும்பாலான உலக வர்த்தகத்தை சாத்தியமாக்குவதாக இருப்பதாலும், அமெரிக்காவுக்கு பலவிதங்களில் ஆதாயம்.
- இவையேல்லாம் தவிர, அதன் ஆதிக்கத்தை எதிர்க்கிற நாடுகளின் பொருளாதாரங்களை முடக்க, அந்த நாடுகள் மீது வர்த்தக தடைகள் மற்றும் ஸ்விப்ட் சிஸ்டத்தில் தடை ஆகியவற்றை அமெரிக்கா செய்து வருகிறது.

## BRICS

- இந்த சிக்கல்களில் இருந்து வெளிவர பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆப்ரிக்கா ஆகிய 5 நாடுகள் சேர்ந்து 2009-ல், பிரிக்ஸ் (BRICS) அமைப்பை உருவாக்கின.
- 2024 ஜனவரி மாதம் ஈரான், எகிப்து, எத்தியோப்பியா மற்றும் ஐக்கிய அரபு நாடுகளும் பிரிக்ஸ் அமைப்பில் சேர்ந்தன.
- சவுதி அரேபியா மற்றும் மலேஷியா ஆகியவை தவிர நேட்டோ உறுப்பு நாடான துருக்கியும் சேர விருப்பம் தெரிவித்திருக்கின்றன.
- பிரிக்ஸ் அமைப்பு உலக வங்கி மற்றும் சர்வதேச நிதியமான ஐ.எம்.எப் ஆகியவற்றுக்கு மாற்றாக நியூ டெவலப்மெண்ட், பேங்க் ஒன்றை உருவாக்கியுள்ளது.
- அமெரிக்கா அரசு விதித்த தடைகளின் காரணமாக ரஷ்யா, ஸ்விப்ட்க்கு மாற்றான, 'சிஸ்டம் ஃபார்டிரான்ஸ்பர் ஆப் பைனான்சியல் மெசேஜஸ்' (SPFS) என்ற பணம் பரிமாற்ற தகவல் ஏற்பாட்டை உருவாக்கியிருக்கிறது.
- அதேபோல சீனாவும் 'கிராஸ் பார்டர் இன்டர்நேஷனல் பேமெண்ட் சிஸ்டம்' (CIPS) என்ற ஏற்பாட்டை உருவாக்கியிருக்கிறது. இவற்றை ஒருங்கிணைக்கிற முயற்சி நடந்து வருகின்றன.